மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாள் சனிக்கிழமை
இ.ம.எண்.16/2023
அ.வ.எண்.03/2019

1. குமார்
2. G.கீதா ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. K.தங்கராஜ்
2. அனகப்பன்
3. அருள்மொழி
4. தேன்மொழி
5. கார்த்திகேயன்
6. இளையராஜா
7. ஜோதி
8. ஆறுமுகம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 01.08.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.அழகேசன் அவர்கள் ஆஜராகியும், எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்தும், 2 முதல் 8 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.வேல்முருகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17, 18 உ/இ பிரிவு 151ன் கீழ் வழக்குரையில் திருத்தங்கள் மேற்கொள்ள உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு

விசாரணைக்காக பட்டியலிடப்பட்டுள்ள நிலையில், வழக்குரை சொத்து விவரத்தில் தாவா B அட்டவணை தடவழியின் ச.எண்.435/1 என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், தற்போது மேற்படி சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டு ச.எண்.435/1B என மாறியுள்ளதால், தாவா வழக்குரையில் மேற்படி B அட்டவணை சொத்திற்கான புதிய ச.எண்.435/1B ஐ குறிப்பிட்டு சொத்து விவரத்தில் திருத்தம் செய்ய வேண்டி மனுதாரர்கள் இம்மனு தாக்கல் செய்துள்ளனர்.

2) 6ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2 முதல் 5 மற்றும் 7, 8 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(i) மனு பொய்யானது, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தாவா வண்டி தடம் என்பது இல்லை என்றும், மேலும் சர்வே எண்.435/1 ஆனது சர்வே எண்.435/1B என்று எப்போது தெரிய வந்தது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை. மேற்படி சர்வே எண்கள் தாவா நிலுவையில் உள்ள போது ஏற்பட்டதால் அது நிலைக்கத்க்கதல்ல. தாவா நிலுவையில் உள்ளபோது எவ்வித மாறுதலும் செய்யக்கூடாது என்பது சட்டநிலை கோட்பாடு ஆகும். மேலும் சர்வே எண் மாறுபட்டதை நிரூபிக்க நடவடிக்கை எடுக்காமல், தாவாவில் ஒரு திருத்தம் செய்ய இயலாது என்பதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல.

(ii) மேலும் மனுதாரர்கள் தனது மனுவில், தாவா சொத்திலுள்ள "B" செட்யூல் சொத்தில் 435/1 என்ற சர்வே எண்ணில் உள்ள பாதையை 435/1B ல் உள்ளதாக திருத்தம் செய்ய கோரியது தவறு. மேலும் வருவாய் அதிகாரிகளாலும் பாதையை சப்டிவிசன் செய்ய இயலாது என்பதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி தாவாவில் காலநீட்டிப்பு செய்து இந்த எதிர்மனுதாரர்களை அழைக்கழித்து துர்லாபம் அடையும் பொருட்டு இம்மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. எனவே சர்வே எண்.435/1 ஆனது சர்வே எண்.435/1B என திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும்

எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு:–

(i) மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்காக பட்டியலிடப்பட்டுள்ள நிலையில், வழக்குரை சொத்து விவரத்தில் தாவா B அட்டவணை தடவழியின் ச.எண்.435/1 என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், தற்போது மேற்படி சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டு ச.எண்.435/1B என மாறியுள்ளதால், தாவா வழக்குரையில் மேற்படி B அட்டவணை சொத்திற்கான புதிய ச.எண்.435/1B ஐ குறிப்பிட்டு சொத்து விவரத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என கோரி மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தாவா வண்டி தடம் என்பது இல்லை என்றும், மேலும் சர்வே எண்.435/1 ஆனது சர்வே எண்.435/1B என்று எப்போது தெரிய வந்தது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றும், மேற்படி சர்வே எண்கள் தாவா நிலுவையில் உள்ள போது ஏற்பட்டதால் அது நிலைக்கத்க்கதல்ல என்றும், தாவா நிலுவையில் உள்ளபோது எவ்வித மாறுதலும் செய்யக்கூடாது என்பது சட்டநிலை கோட்பாடு ஆகும் என்றும், மேலும் சர்வே எண் மாறுபட்டதை நிரூபிக்க நடவடிக்கை எடுக்காமல், தாவாவில் ஒரு திருத்தம் செய்ய இயலாது என்பதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iii) இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களையும், இவ்வழக்கின் சங்கதிகளையும் பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கில் வாதிகள்/மனுதாரர்கள் வழக்கு விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்த சமயத்தில் தான் தாவா B அட்டவணை சொத்திற்குரிய ச.எண்.435/1 ஆனது ச.எண்.435/1B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விவரம் தங்களுக்கு தெரிய வந்தது எனவும், எனவே மேற்படி உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்ணை வழக்குரை சொத்து விவரத்தில் திருத்தம் செய்ய வேண்டியது அவசியமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(iv) அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில், மேற்படி ச.எண்.435/1 ஆனது ச.எண்.435/1B ஆக உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் எப்போது தெரிய வந்தது என மனுதாரர்கள் தெரிவிக்காத நிலையிலும், மேற்படி தாவா B அட்டவணை வண்டித்தடத்திற்கு தனியாக எந்த ஒரு சர்வே எண்ணும் இல்லாத நிலையிலும், மேற்படி சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்காத நிலையிலும், தற்போது வழக்கு நிலுவையில் இருக்கும் போது வழக்குரை சொத்து விவரத்தில் புதிதாக ஒரு சர்வே எண்ணை சேர்ப்பது ஏற்கதக்கதல்ல என எதிர்வாதம் செய்துள்ளதும் தெரிய வருகிறது.

(v) இருதரப்பு வாதங்களையும் கவனமாக பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் கூறுவது போல் மேற்படி ச.எண்.435/1 ஆனது ச.எண்.435/1B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும், மேற்படி உட்பிரிவு செய்யப்பட்டுள்ள ச.எண்.435/1B ல் தான் தாவா B அட்டவணை தடவழி அமைந்துள்ளது என்பதையும், நிரூபிக்க வேண்டிய பொறுப்பு மனுதாரர்களிடமே உள்ளதால், மேற்படி சங்கதிகள் குறித்து வழக்குரையில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதகமான சூழ்நிலையும் ஏற்படப்போவதில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) மேற்கண்ட சங்கதிகளை கருத்தில் கொள்கையிலும், இவ்வழக்கில் விசாரணை துவங்கப்படாத நிலையிலும், மனுதாரர்கள் வழக்குரை சொத்து விவரத்தில் திருத்தத்தை மேற்கொள்ளும் பட்சத்தில், அதுகுறித்து கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யவோ, சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவோ, எதிர்மனுதாரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்பதாலும், மனுதாரர்கள் கோரும் திருத்தங்கள் தரப்பினரிடையே உள்ள

பிரச்சனையை தீர்ப்பதற்கு இந்நீதிமன்றத்திற்கு உதவியாக இருக்கும் என்பதாலும், மேலும் மேற்படி திருத்தங்கள் தொடர்பாக வாதிகள் தரப்பு சாட்சிகளை வழக்கு விசாரணையின் போது குறுக்கு விசாரணை செய்யவும், எதிர்மனுதாரர்களுக்கு வாய்ப்புகள் உள்ளதை கருத்தில் கொள்கையிலும், மேற்படி திருத்தங்கள் அனுமதிக்கப்படுவதால், எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதகமான சூழ்நிலையும் ஏற்பட வாய்ப்பில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், நீதியின் நலனையும் கருத்தில் கொள்கையில், மனுவில் கோரியுள்ள திருத்தமானது இருதரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சனையை தீர்க்கும் வகையில் உள்ளதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2023.09.02 18:47:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2023.09.02 18:48:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.